ඌව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
ஊவா மாகாண கல்வித் திணைக்களம்
Uva Provincial Department of Education

# முன்னோடிப் பரீட்சை - 2021(2022)

| தரம் 11 | வரலாறு – I | நேரம் : 3 மணி. |
|---|---|---|

**கவனிக்க.**

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 1, 2, 3, 4 என இலக்கதிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்குமான விடையின் இலக்கத்திற்கு (x) அடையாளம் இடுக.**

1. மகா வம்சத்தின் முதலாம் பாகம் எழுதப்பட்டு அதற்கு விளக்கமளிக்கும் வகையில் எழுதப்பட்ட உரைநூல்,
   01. சிஹல அட்டகதா
   02. வம்சத்தப்பகாசினி
   03. சமத்த பாசதிக
   04. ரசவாஹினி

2. கற்காலத்தில் வாழ்ந்த மனிதன் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ள அத்தனகொட அலுலென இடம் அமைந்திருக்கும் வலயமாவது,
   01. அரைவறல் வலயம்
   02. தாழ்நில உலர் வலயம்
   03. தாழ் நில இடை உலர் வலயம்
   04. ஈர வலயம்

3. ஆரம்ப வரலாற்று காலத்தில் இந்நாட்டு மக்கள் செறிந்து வாழ்ந்தாக கருதப்படுவது.
   01. கற் குகைகளை அண்மித்து
   02. கல்வெட்டுக்களை அண்மித்து
   03. பாரியக் குளங்களை அண்மித்து
   04. சிறிய குளங்களை அண்மித்து

4. தேவநம்பிய திஸ்ஸ மன்னன் காலத்தில் அரச அதிகாரம் மத்தியமயப்படுத்துவதற்கு தாக்கம் செலுத்திய பிரதான காரணி பின்வருவனவற்றுள் எது?
   01. சகல பிரதேச ஆட்சியாளருடனும் நல்லுறவைக் கொண்டிருந்தமை.
   02. அசோக சர்க்கரவர்த்தியுடன் தேவநம்பிய திஸ்ஸ மன்னன் கொண்டிருந்த உறவை பலப்படுத்தியமை.
   03. இந்து சமுத்திர வலயத்தில் பிரசித்தி பெற்ற வர்த்தகத்தில் சுதந்திர நாடாக செயற்பட்டமை.
   04. பஞ்சவஸ்த்துக்களைப் பயன்படுத்தி மீண்டும் முடிசூட்டு விழாவை நடாத்தியமை.

5. புராதான இலங்கையில் அரசுரிமை தந்தையின் பின் மகனுக்கு கிடைத்தமைக்கான உதாரணம் பின்வருவனவற்றில் எது?
   01. துட்டகைமுனுவின் பின் சத்தாதிஸ்ஸ மன்னன்.
   02. வசப மன்னனின் பின் வங்கா நாசிக்க திஸ்ஸ மன்னன்.
   03. தேவ நம்பியதிஸ்ஸ மன்னனின் பின் உத்திய மன்னன்.
   04. 1ம் பராக்கிரமபாகு மன்னனின் பின் 2ம் விஜயபாகு மன்னன்.

6. - சிறுவயதில் உருகுணைக்குச் சென்று வளர்ந்தமை
   - சோழர்களை தோல்வியடையச் செய்து நாட்டை ஐக்கியப்படுத்தியமை.
   - இந்து சமுத்திரத்தின் கிழக்குப்பகுதியுடன் வர்த்தகத் தொடர்புகளை மேற்கொள்ள நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்டமை.
   - பௌத்த விகாரைகளை புனரமைத்தமை

   மேற்குறிப்பிட்டுள்ள கூற்றுக்களுடன் தொடர்புடைய மன்னன்.

   01. துட்டகைமுனு   02. வசப மன்னன்   03. 1ம் விஜயபாகு   04. 1ம் பராக்கிரமபாகு

7. பொது மக்களின் சுகாதார சேவையை மேம்படுத்துவதற்கு சேவை செய்த மன்னர்களை மட்டும் கொண்ட விடைத் தொகுதி.
   01. 5ம் மகிந்தன், புத்ததாஸ மன்னன், 4ம் காசியப்பன்
   02. பாதிகாபாய மன்னன், 1ம் கஜபாகு மன்னன், வசப மன்னன்
   03. வசப மன்னன், 4ம் காசியப்ப மன்னன், 1ம் உபதிஸ்ஸ மன்னன்
   04. 5ம் மகிந்தன், புத்ததாஸ மன்னன், 3ம் உதயன்

8. புராதான கலைஞர்கள் தொடர்பில் நிரல் 'அ' இலும் அவர்கள் பற்றிய தகவல்களை கூறும் கல்வெட்டுக்கள் நிரல் 'ஆ' விலும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்விரு நிரலினையும் பொருத்தும் போது வரும் சரியான விடை எது?

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. கம்மாளர்கள் | A. மண்டகல கல்வெட்டு |
| 2. தந்த செதுக்கல் கலைஞர் | B. வெஹெராகெம கல்வெட்டு |
| 3. பொற்கொல்லர்கள் | C. முதுகல்ல கல்வெட்டு |
| 4. நூல் நூற்பவர்கள் | D. சீகிரிய நீர் பூங்கா கல்வெட்டு |
| | E. வேகிரிய தேவாலய கல்வெட்டு |

   01. CAED   02. CEAB   03. ACBE   04. BCAE

9. வர்த்தக கொடுக்கல், வாங்கல் காரணமாக சீனாவுடன் நெறுக்கமான உறவுகளை ஏற்படுத்திக் கொண்ட மன்னன் யார்?
   01. 6ம் ஆக்கிரபோதி   02. 5ம் காசியப்பன்   03. 2ம் காசியப்பன்   04. 2ம் ஆக்கிர போதி

10. புராதான காலத்தில் ஆபரணங்களை தயாரிக்கும் தொழிநுட்பத்தில் தங்க ஆபரணத்தைக் குறிப்பிடலாம். அதில் சிறப்பாக நேர்த்தியாகப் பொறிக்கப்பட்ட தங்க ஆபரணம் எந்த இடத்தில் கண்டுப்பிடிக்கப்பட்டது?
   01. மகா விகாரை   02. அபயகிரி விகாரை
   03. கல் விகாரை   04. ஜேதவனாராமய விகாரை

11. 'கமிக' வின் கடமைகள் தொடர்பில் பின்வருவனவற்றில் சரியான கூற்றாக அமைவது.
   01. கிராமங்களுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்தல்.
   02. கிராமம் தொடர்பாக தீர்மானம் எடுத்தல்.
   03. பொது வைபவங்களுக்கு தலைமைத்துவம் வகித்தல்.
   04. மேற்குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தும் சரி.

12. கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் பிழையான கூற்றை தெரிவு செய்க.
    01. உலர் வலயத்தில் வருடம் முழுவதும் நீரைப் பெற்றுக்கொள்ள முடியாத போதிலும் ஆரம்பக் குடியேற்றங்கள் பரவியமைக்கு அங்கு வளமான மண் காணப்பட்டமை ஆகும்.
    02. குடும்பத் தலைவர்களில் இருந்து தெரிவு செய்யப்படுபவரே ‘‘கமிக’’ என்று புத்தகோச தேரர் ‘‘சமந்த பாசதிகா’’ எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளார்.
    03. தேவநம்பிய திஸ்ஸ மன்னன் இலங்கையின் முதல் பௌத்த மன்னன் என்பதோடு இரண்டு முறை முடி சூடிக்கொண்ட மன்னன் ஆவார்.
    04. இலங்கையை முதன் முதலாக ஒரு குடையின் கீழ் கொண்டு வந்த மன்னன் ஆவதோடு இம்மன்னனின் செயற்பாடுகளில் பங்கு பற்றிய தளபதிகள் அப்பதவியை பெறுவதற்கு முன்னர் பருமகராக இருந்திருக்கவில்லை.

13. இலங்கையில் ஆட்சியுரிமை சகோதரனிடம் இருந்து சகோதரனுக்கு கிடைக்கப்பெற்றமைக்கான உதாரணம்,
    01. மூத்த சிவனுக்குப் பின்னர் தேவநம்பிய திஸ்ஸனுக்கு ஆட்சியுரிமைக் கிடைத்தமை.
    02. காவன் தீசனுக்குப் பின்னர் துட்டகைமுனுவிற்கு ஆட்சியுரிமைக் கிடைத்தமை.
    03. துட்டகைமுனுவிற்கு பின்னர் சத்தா தீசனுக்கு ஆட்சியுரிமைக் கிடைத்தமை.
    04. பண்டுகாபயனின் பின்னர் மூத்த சிவனுக்கு ஆட்சியுரிமைக் கிடைத்தமை.

14. கீழே தரப்பட்டுள்ள ‘அ’ நிரலுடன் ‘ஆ’ நிரலுடன் தொடர்புப்படுத்தினால் வரும் விடைத் தொகுதியை தெரிவு செய்க.

| ‘அ’ | ‘ஆ’ |
|---|---|
| 1. புத்ததாஸ மன்னன் | A. நாடெங்கும் உள்ள வைத்தியசாலைக்கு தேவையான சகல வசதிகளையும் வழங்கியவர். |
| 2. 5ம் மகிந்தன் | B. ‘பஸவந்தி நாமசால’ எனும் பிரசவ விடுதியைக் கட்டினார் |
| 3. 4ம் காசியப்பன் | C. காச்சலால் பீடிக்கப்பட்ட நோயாளர்களைப் பராமரிப்பதற்கு ‘உபசக்க ரோகநாச’ எனும் தனியான வைத்திசாலையைக் கட்டினார். |
| 4. 1ம் உபதிஸ்ஸ | D. சொத்திசால எனும் பிரசவ விடுதியை நிர்மாணித்தமை. |
| | E. வைத்தியசாலைகளை நிர்மாணிப்பதில் ஆர்வங் கொண்ட மன்னன் ஆவார். |

01. ECAB    02. EACB    03. BECD    04. ADBE

15. நிரல் ‘அ’ வில் புராதான துறைமுகங்கள் தொடர்பிலான விடயங்களும் நிரல் ‘ஆ’ வில் புராதான துறைமுகங்களும் தரப்பட்டுள்ளன. நிரல் ‘அ’ வினை நிரல் ‘ஆ’ வுடன் பொருத்தினால் வரும் விடைத் தொகுதி எது?

| ‘அ’ | ‘ஆ’ |
|---|---|
| 1. அனுராதபுர காலத்தில் முக்கிய வர்த்தக துறைமுகம் | A. லங்காப்பட்டினம் |
| 2. பொலன்னறுவைக் காலத்தில் முக்கிய வர்த்தக துறைமுகம். | B. ஜம்புகோளப்பட்டினம் |
| 3. ஹேமமாலா இளவரசியும், தந்த இளவரசனும் | C. கோகண்ண துறைமுகம் |
| 4. புனித வெள்ளரசு மரக்கிளை கொண்டுவரப்பட்டமை | D. மகாதித்த துறைமுகம் |

01. ABDC    02. ADCB    03. DCAB    04. CDAB

16. எந்தவொரு மிருகத்தையும் கொல்லக்கூடாதென முதன்முதல் சட்டம் இயற்றிய மன்னன்.

01. ஆமண்ட காமினி  02. நிசங்க மல்ல  03. 4ம் மகிந்தன்  04. 5ம் காசியப்பன்

17. 3ம் உதய மன்னனால் அமைக்கப்பட்ட புத்தன்னெஹெல கல்வெட்டில் கூறப்படுவது,

01. காட்டு மரங்களை வெட்டக்கூடாது.
02. மரஞ்செடி கொடிகளின் முகாமைத்துவம்.
03. வாய்க்கால்களில் சிறிய மீன்களை பிடித்தலில் தடைதொடர்பாக.
04. சதுப்பு நிலத்தை அண்டி வாழும் பறவைகளைக் கொல்லக்கூடாது.

18. தனது ஆட்சியின் மத்திய நிலையமாக அநுராதபுரம் தெரிவு செய்து அதனை நகரமாகக் கட்டியெழுப்பிய மன்னன்,

01. தேவநம்பிய திஸ்ஸ மன்னன்  02. பண்டுகாபய மன்னன்
03. துட்டகைமுனு மன்னன்  04. காசியப்ப மன்னன்

19. பின்வரும் ‘அ’ மற்றும் ‘ஆ’ நிரலுடன் தொடர்புப்படுத்தும் போது வரும் விடைத் தொகுதியை தெரிவு செய்க.

| ‘அ’ | ‘ஆ’ |
|---|---|
| 1. யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆரம்ப ஆட்சியாளன். | A. 2ம் சங்கிலியன் |
| 2. யாழ்ப்பாண இராச்சியத்தின் இறுதி ஆட்சியாளன் | B. பரராஜ சேகரன் |
| 3. போர்த்துக்கேயர் வரும் போது யாழ்ப்பாண ஆட்சியாளன் | C. 1ம் சங்கிலியன் |
| 4. வீதிய பண்டாரவுக்கு பாதுகாப்பு வழங்கிய யாழ்ப்பாண ஆட்சியாளன். | D. விஜய கூலங்கை |

01. DABC  02. CADB  03. BCDA  04. ACDB

20. பின்வரும் சேவைகளை ஆற்றிய அரசனாகக் கருதப்படுபவர் யார்?

- நாட்டின் கல்வி மட்டும் இலக்கியத்துறைகளில் சேவையாற்றியதனால் சிங்கள இலக்கியம் பொற்காலம் எனக் கூறப்படுகின்றது.
- சப்புமல் குமாரனின் தலைமையில் படையனுப்பி யாழ்ப்பாண இராச்சியத்தை வெற்றிக் கொண்டமை.
- மலையகத்தில் ஜோதிய கிளர்ச்சியை அடக்கியமை.
- இறுதியாக இலங்கையை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்தமை.

01. 4ம் பராக்கிரமபாகு  02. 6ம் பராக்கிரமபாகு
03. 2ம் பராக்கிரமபாகு  04. 1ம் பராக்கிரமபாகு

21. கண்டி இராச்சியத்தின் நிர்வாக ஒழுங்கமைப்பு தொடர்பாக பிழையான கூற்றாகக் கருதப்படுவது.

01. கண்டி இராச்சியத்தின் நிர்வாக அமைப்பில் முதன்மை நபராக விளங்கியவன் மன்னனாவான்.
02. கண்டி இராச்சிய பிராந்திய நிர்வாகம் ரட்ட திஸாவை என இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டிருந்தது.
03. கண்டி இராச்சியத்தில் சமூகத் தொடர்பு குலத்தை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்பட்டிருந்தது.
04. கண்டி இராச்சியத்தின் இறுதி காலத்தில் வரி அமைப்பு (பத்து) திசாவைமாரின் கீழ் செயற்பட்டது.

22. போர்த்துக்கேயரிடம் தஞ்சமடைந்து தொன்பிலிப் எனும் பெயரில் ஞானஸ்தானம் பெற்ற கண்டிய இளவரசன்.

01. கரலியத்த பண்டார  02. வீர சுந்தரபண்டார
03. யமசிங்க பண்டார  04. ஜயவீர பண்டார

- A தொடக்கம் I வரையிலான தகவல்களைப் பயன்படுத்தி 23, 24 வினாக்களுக்கு விடைத் தருக.

| வருடம் | ஐரோப்பிய தூதுவர்கள் | சந்தித்த மன்னன் |
|---|---|---|
| A. 1505 | D. ஜோரிஜ்வேன்ஸ்பில்பேஜன் | G. 8ம் வீரபராக்கிரமபாகு |
| B. 1602 | E. லோரேன்சோடி அல்மேடா | H. கீர்த்தி ஶ்ரீ இராஜசிங்கன் |
| C. 1762 | F. ஜோன்பைபஸ் | I. 1ம் விமலதர்ம சூரியன் |

23. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகைத் தந்து முதலாவது சந்தர்ப்பத்துடன் தொடர்புடைய விடைத் தொகுதி,

01. B, D, G  02. A, F, H  03. C, E, I  04. A, E, G

24. கண்டி இராச்சியத்தின் ஒல்லாந்து தூதுவரின் வருகையோடு தொடர்புப்பட்ட விடயங்கள் அடங்கிய விடைத்தொகுதி.

01. B, D, H  02. B, D, I  03. C, F, H  04. A, E, G

25. பௌத்தமத எழுச்சிக்காக வெலிவிட்ட சரணங்கர பிக்குவின் ஆலோசணைப்படி பர்மாவில் இருந்து பிக்குகளை வரவழைத்து உபசம்பந்தா நடவடிக்கைகளை மேற்கொண்ட மன்னன்.

01. கீர்த்தி ஶ்ரீ இராஜசிங்கன்  02. 1ம் விமலதரம சூரியன்
03. ஶ்ரீ விஜய இராஜசிங்கன்  04. இராஜாதி இராஜசிங்கன்

26. கி.பி 1548 இல் சீதாவாக்கை அரசனான மாயாதுண்ணையுடன் கூட்டு சேர்ந்த யாழ்ப்பாண ஆட்சியாளன்.

01. பரராசசேகரம்  02. குல சேகரன்  03. எதிர் மன்னசிங்கம்  04. 1ம் சங்கிலியன்

- பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 27ம் 28ம் வினாக்களுக்கு விடை தருக.
  A. நிர்வாகக் குழு முறை
  B. மது ஒழிப்பு இயக்கம்
  C. நிதிச் செயலாளர்
  D. இலங்கை தேசிய சங்கம்
  E. நீதிமன்ற தொகுதி

27. டொனமூர் அரசியலமைப்பு சீர்திருத்தத்துடன் மாத்திரம் சம்மந்தப்பட்ட விடயம்.

01. A, C  02. C, E  03. A, D  04. C, B

28. குறு மக்கலம் யாப்பின் பின்னர் உருவான இரு தேசிய இயக்கங்களைக் காட்டும் விடை.

01. C, D  02. B, D  03. E, B  04. D, A

29. சென்னை ஆட்சியாளரின் கீழ் தெரிவு செய்யப்பட்ட “அவுமில்தார்” எனும் அதிகாரிகள் எதற்காக நியமிக்கப்பட்டனர்?

01. நீதி அதிகாரத்தை நிலை நாட்டல்.
02. கடற்கரை பிரதேசத்தை ஆட்சி செய்தல்
03. வரி வசூலிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடல்
04. தெங்கு வரி உட்பட புதிய வரிகள் நீக்கப்பட்டமை.

30. A – பிக்குகள் சுதேச வைத்தியர்கள் ஆசிரியர்கள் விவசாயிகள் தொழிலாளர்கள் ஆகிய ஐம்பெரும் சக்திகள் ஒன்றினைதல்.

B – அரிசி மற்றும் உணவுப் பொருட்களின் விலை அதிகரித்தமையால் 1953 இல் பிரதமர் பதவியை இராஜினாமா செய்தமை.

C – உலகில் முதல் பெண் பிரதமர்.

மேல் காட்டப்பட்டுள்ள விடயங்களுடன் தொடர்புடைய பிரதமர்களை காட்டும் விடைத் தொகுதி,

01. டட்லி சேனநாயக்க, ஜோன் கொத்தலாவ, S.W.R.D. பண்டாரநாயக்க
02. S.W.R.D. பண்டாரநாயக்க, டட்லி சேனநாயக்க, ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்க
03. S.W.R.D. பண்டாரநாயக்க, ஜோன் கொத்தலாவ, ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்க
04. டட்லி சேனநாயக்க, ஜோன் கொத்தலாவ, ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்க

31. துரித மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட நீர்த்தேக்கங்கள் “அ” நிரலிலும் அதற்கு உதவி வழங்கிய நாடுகள் “ஆ” நிரலிலும் காட்டப்பட்டுள்ளன. ‘அ’ நிரலுடன் ‘ஆ’ நிரலை தெரிந்து சரியான விடையை தெரிவு செய்க.

| ‘அ’ | ‘ஆ’ |
|---|---|
| 1. கொத்மலை நீர்த்தேக்கம் | A - மேற்கு ஜெர்மனி |
| 2. விக்டோரியா நீர்த்தேக்கம் | B - சுவீடன் |
| 3. ரந்தனிகல நீர்த்தேக்கம் | C - பிரித்தானியா |
| | D - சீனா |

01. DBC    02. CBA    03. BCA    04. ACB

32. பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் கிறிஸ்தவ மதத்தை பரப்பும் பிரபல இயக்கம் மிஷனரி இயக்கம் ஆகும். இதில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பிய மிஷனரி இயக்கத்தின் பெயர்.

01. வெஸ்லியன் மிஷனரி இயக்கம்
02. அமெரிக்கன் மிஷனரி இயக்கம்
03. சேர்ச் மிஷனரி இயக்கம்
04. லண்டன் மிஷனரி இயக்கம்

33. மறுமலர்ச்சி ஏற்பட்டதில் தாக்கம் செலுத்திய பிரதான காரணி.

01. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி
02. வர்த்தக வளர்ச்சியும் செல்வந்தர்களின் தோற்றமும்
03. கொன்ஸ்தாந்து நோபில் துருக்கியரால் கைப்பற்றப்பட்டமை
04. அறிவு வளர்ச்சி

34. ஆபிரிக்காவின் நன்னம்பிக்கை முனையைக் கண்டு பிடித்த நாடுகாண் பயணி.

01. வாஸ்கொடகாமா
02. கிறிஸ்தோபர் கொலம்பஸ்
03. பர்த்தலோமியல் டயஸ்
04. பேடினன் மகலன்

35. கைத்தொழில் புரட்சியின் காரணமாக அரசியலில் ஏற்பட்ட மாற்றத்தைக் காட்டும் விடை.

01. நகரத்தின் தொகை அதிகரித்தமை
02. வர்த்தக சங்கங்கள் உருவானமை.
03. வர்க்க வேறுபாடுடைய சமூகம் தோற்றம் பெற்றமை.
04. தொழிலாளர் வேலை நிறுத்தம், தொழிற் சங்கங்கள் உருவானமை.

- கீழே தரப்பட்டுள்ள ABCD களில் காட்டப்பட்டுள்ள விடங்களை அடிப்படையாகக் கொண்டு 36 முதல் 38 வரையான வினாக்களுக்கான விடை தருக.

A i. அமெரிக்கப் புரட்சி
ii. பொஸ்டன் தேனீர் விருந்து

B i. V.I. லெனின்
ii. சோசலியம்

C. i. ஓட்டோமன் பிஸ்மர்க்
ii. வில்லியம் கைசர்

D. i. யப்பான் சரணடைதல்
ii. 2ம் உலக மகாயுத்தம்

36. முதலாவதன் காரணமாக இரண்டாவது முடிவடைவதை காட்டும் சோடியைக் விடைத் தொகுதி

01. A    02. B    03. C    04. D

37. இரண்டாவது காரணமாக முதலாவது தோற்றம் பெற்றதைக் காட்டும் விடைச்சோடி எது?

01. A    02. B    03. C    04. D

38. இரண்டாவதில் உருவான நோக்கமானது முதலாவதில் உருவான நோக்கத்திற்கு மாறாக அமைந்தமை தொடர்பிலான விடைச்சோடி.

01. A    02. B    03. C    04. D

39. சோவியத் ரஷ்யாவின் வழிக்காட்டலின் கீழ் சோசலிசவாத கட்டமைப்பை மாத்திரம் காட்டும் நாடுகள்,

01. மேற்கு ஜேர்மனி, போலந்து, செக்கோஸ்லாவாக்கியா
02. ஹங்கேரி, கிழக்கு ஜேர்மனி, போலந்து
03. போர்த்துக்கல், நெதர்லாந்து, இத்தாலி
04. கிரேக்கம், போலந்து, பிரான்ஸ்

40. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையில் அடங்கும் 'இரத்து செய்யும் அதிகாரத்தைக்' கொண்ட நாடுகளை மட்டும் காட்டும் விடைத் தொகுதி,

01. இந்தியா, சீனா, பிரான்ஸ், அமெரிக்கா, இத்தாலி.
02. சீனா, அமெரிக்கா, ரஷ்யா, கனடா, இந்தியா.
03. சீனா, பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா, பிரித்தானியா
04. பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ், ரஷ்யா, இந்தியா

(2x40= 80 புள்ளிகள்)

# முன்னோடிப் பரீட்சை - 2021(2022)

| தரம் 11 | வரலாறு – II | நேரம் : 3 மணி. |
|---|---|---|

**கவனிக்க:**

- **பகுதி I இன் முதலாம் வினா கட்டாயமானது.**
- **பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்கும் பகுதி III இலிருந்து ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.**
- **எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி I

01. (அ). கீழே (i)இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்றிடங்களைத் தரப்பட்டுள்ள இலங்கைப்படத்திலும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்றிடங்களைத் தரப்பட்டுள்ள உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

i. ஊராத்தொட்ட, யான் ஓயா, நாச்சதுவ வாவி, மையங்கனை, தீகவாவி, பூந்தல, கந்தரோடை, கதிர் காமம், எலகர கால்வாய், கொழும்பு, யோதவாவி, சீகிரியா

ii. கருங்கடல், மக்கா, பிலிப்பைன் தீவு, ஒல்லாந்து(நெதர்லாந்து), மும்பாய், ஷிரோஷிமா

(01x18= 18 புள்ளிகள்)

(ஆ). மேலே A, B, C, D எனத் தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்கு முறையில் எழுதுக.

i. A – புயல் காற்றினால் தாக்குண்டு எதிர்பாராத விதமாக இலங்கையை வந்தடைந்த போர்த்துக்கேயர்

B – பெலிகலையில் தலதா மாளிகையை அமைத்து புனித தந்த தாதுவை பிரதிஷ்டை செய்த மன்னன்.

C – ஐக்கிய நாடுகளின் சபையை உருவாக்குவதற்கு ஆரம்ப கருத்தாவாக இருந்த ரஷ்ய தலைவர்.

D – 1795 ஆம் ஆண்டு ஒல்லாந்தர் வசமிருந்த திருகோணமலைத் துறைமுகத்தைக் கைப்பற்றிக் கொண்ட பின்னர் இராஜாதி இராஜசிங்க மன்னனை சந்தித்த ஆங்கிலேய தூதுவர்.

(4 புள்ளிகள்)

(இ). A, B ஆ, கிய படங்களை அவதானத்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை இலக்கங்களின் ஒழுங்கில் எழுதுக.

A



A. i. இங்க காட்டப்பட்டுள்ள உருவச்சிலைக்குரிய அரசரின் பெயர் என்ன?

ii. இவ்வுருவச்சிலை எவ்விடத்தில் காணப்படுகின்றது?

iii. இவருடைய காலத்தில் இராஜதந்திர தொடர்புகளை மேற்கொண்ட நாட்டின் பெயரைக் குறிப்பிடுக.

iv. அந்நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட பெறுமதிமிக்க பொருட்கள் எவை?

(4 புள்ளிகள்)

B. i. இப்படத்தில் காட்டப்பட்டுள்ள நபரின் பெயர் என்ன?

ii. இவர் எந்த புரட்சியுடன் தொடர்புடையவர்?

iii. இவ் புரட்சி தொடர்பாக இவரால் முன்வைக்கப்பட்ட தத்துவகருத்தைக் குறிப்பிடுக.

iv. இப்புரட்சி தொடர்பான தமது கருத்துக்களை வலுவூட்டிய மேலும் ஒரு தத்துவஞானியின் பெயரைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

B



## பகுதி II

02. i. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மனிதன் வாழ்ந்த தாழ்நில ஈரவலயக் குகைகள் மூன்றின் பெயர்களைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதனால் பின்பற்றப்பட்ட சடங்கு சம்பிரதாய முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. (a) முன்வரலாற்றுக் காலத்திற்கும் வரலாற்றுக்கும் முற்பட்ட காலத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் மூன்றினையும்,

(b) வரலாற்றுக்கால குளக்குடியேற்றங்கள் (வாபிகாம) கிராமங்களின் பெயர்கள் இரண்டினையும் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

iv. வரலாற்றுக்கால குடியிறுப்புக்களில் தொழில் ரீதியாக ஒன்றுபட்டு வாழ்ந்த குடியிறுப்புக்களின் கட்டமைப்புக்கள் பற்றி உதாரணங்களுடன் விளக்குக. (6 புள்ளிகள்)

03. i. மன்னர்களின் செயற்பாடுகள் காரணமாக அவர்கள் தோற்றம் தரவிரும்பிய பின்வரும் எண்ணக்கருக்களுக்குரிய மன்னர்களின் பெயர்களை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

A. மனிதர்களின் கடவுள்

B. மலையின் அரசன்

C. சக்கரவர்த்தி

(4ம் காசியப்பன், திஸ்ஸங்க மல்ல மன்னன், குட்ட கண்ண, அபய மன்னன், 1ம் காசியப்பன், புத்ததாஸ மன்னன்)

ii. பின்வரும் ஒவ்வொரு விடயத்துடனும் தொடர்புடைய நபரின் பெயரை எழுதுக.

A. பிராந்திய ஆட்சியாளர்கள் பலருடன் சண்டையிட்டு தனது ஆட்சியின் மத்திய நிலையமாக அநுராதபுரத்தை தெரிவு செய்து அதனை கட்டியெழுப்பிய மன்னன்.

B. புனித வெள்ளரசு மரம் நடப்படும் வைபவத்திற்கு கதிர்காமம் மற்றும் சந்தனகாம பிரதேசத் தலைவர்களை அழைப்பித்த அரசன்.

C. நாட்டின் நிர்வாக மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு அந்த ஒவ்வொரு மாவட்டத்தையும் நிர்வகிப்பதற்கு அமைச்சர்களை நியமித்த மன்னன்.

D. அரசியல் அதிகாரம் பரவலாக்கப்பட்டிருந்த வேளையில் பருமகர்களாக பதவிகளில் இருந்த பிராந்திய பிரமுகர்களின் தலைவர்களுக்கு அதிகாரம் மத்தியப்படுத்தப்பட்ட பின்னர் அரசின் பல்வேறு பதவிகளை வழங்கிய மன்னன். (4 புள்ளிகள்)

iii. புராதன கால அரசர்கள் நாட்டு மக்களுடைய பொதுச் சுகாதார வசதிகளை வழங்குவதற்கான செயற்பாடுகளை மேற்கொண்டனர். என்பதற்கான இரு உதாரணங்களை குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

iv. 1ம் விஜயபாகு மன்னன் சிறந்த ஆட்சியாளனாக செயற்பட்டமைக்கான மூன்று விடயங்களை குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

04. i. நீரை பாதுகாப்பதற்காக முன்னோர்களால் கட்டப்பட்ட கால்வாய்கள் மூன்றின் பெயரைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. நீர் முகாமைத்துவத்தில் உயர்படைப்பாகக் கருதப்படுவது குளங்கள் ஆகும். கீழே A,B,C,D எனத்தரப்பட்டுள்ள குள உறுப்புகளின் பிரதான தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக.

A. கலிங்கல் தொட்டி

B. அலைத் தாங்கி

C. குளக்கட்டு

D. மடைக்கதவு (4 புள்ளிகள்)

iii. பண்டைய இலங்கையில் எமது முன்னோர்கள் அளத்தல் முறைகள் தொடர்பில் தேசிய அறிவை பெற்றிருந்தனர் என்பதற்கு இரு அளத்தல் முறைகளை குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

iv. அக்காலத் தொழிநுட்பவியலாளர்கள் சிறப்பான கட்டட நிர்மாணங்களை மேற்கொண்டமைக்கான ஆதாரங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

05. i. பின்வரும் அரசர்கள் ஆட்சி புரிந்த இராசதானிகளின் பெயர்களை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து, A, B, C ஒழுங்கில் எழுதுக.

A. 2ம் பராக்கிரமபாகு மன்னன்

B. 4ம் பராக்கிரமபாகு மன்னன்

C. 6ம் பராக்கிரமபாகு மன்னன்

(குருணாகல், தம்பதெனியா, கோட்டை) (3 புள்ளிகள்)

ii. இரண்டாம் நகரமயமாக்கல் செயற்பாட்டின்போது உருவான இராசதானிகள் நான்கின் பெயர்களை குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. இரண்டாம் நகரமயமாக்கலில் காணப்பட்ட பொருளாதார கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினை குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

iv. கோட்டை இராசதானி வீழ்ச்சிக்குரிய காரணங்கள் மூன்றினை விளக்குக. (6 புள்ளிகள்)

06. i. பின்வரும் நபர்கள் மன்னராகும் போது எப்பெயரால் அழைக்கப்பட்டனர் என்பதனை பின்வரும் அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

A. கண்ணுசாமி

B. மகா அஸ்தான

C. கொணப்பு பண்டார

(2ம் இராஜசிங்கன், ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் , 1ம் விமலதர்ம சூரியன்) (3 புள்ளிகள்)

ii. போர்த்துக்கேயர் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்த போது ஏற்பட்ட பின்வரும் போர்களுக்கு தலைமைத்துவம் வகித்த அரசர்களின் பெயர்களை குறிப்பிடுக.
   A. கன்னொருவப் போர்
   B. பலனைப் போர் (4 புள்ளிகள்)

iii. கண்டி இராச்சியக் காலத்தில் காணப்பட்ட பொருளாதார கட்டமைப்பின் பிரதான அம்சங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

iv. கண்டி இராசதானியை போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தருக்கு கைப்பற்ற முடியாமைக்கான காரணங்கள் மூன்றினை சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

07. i. இந்தியாவில் பிரான்சியரால் நிறுவப்பட்ட வர்த்தக நிலையங்களை பின்வரும் அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.
(சூரத், காரைக்கால், பாண்டிச்சேரி, பம்பாய், சந்திரநகர், கல்கத்தா) (3 புள்ளிகள்)

ii. கி.பி. 1815 இல் கண்டி மீதான படையெடுப்பு தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. பெருந்தோட்டத்துறையின் அபிவிருத்திக்கு காரணமான கோல்புறூக் ஆணைக்குழுவின் சிபாரிசுக்கள் இரண்டினை விளக்குக. (5 புள்ளிகள்)

iv. இந்நாட்டின் சுதந்திரத்தின் பின்னரான பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

## பகுதி III

08. i. பிரித்தானியரால் அமெரிக்காவில் நிறுவப்பட்ட குடியேற்றங்கள் மூன்றின் பெயரைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. கீழே A, B, C, D எனத்தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய பொருத்தமான விடையை எழுதுக.
   A. அமெரிக்க சுதந்திர போராட்டத்தின் போர் உறுதி மொழி
   B. அமெரிக்க குடியேற்றங்களில் இருந்து புதிய வரிகளை அறவிட்ட பிரதமர்
   C. உலக வரலாற்றின் முக்கிய ஆவணமான அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தில் அடங்கியுள்ள பதம்
   D. ஐக்கிய அமெரிக்க நாட்டின் முதல் ஜனாதிபதி. (4 புள்ளிகள்)

iii. பிரான்சியப் புரட்சிக்கான பொருளாதாரக் காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

iv. அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தின் விளைவுகள் மூன்றினை குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

09. i. முதலாம் உலக மகாயுத்தத்தில் நட்பு அணியில் காணப்பட்ட நாடுகள் மூன்றினை எழுதுக. (3 புள்ளிகள்)

ii. முதலாம் உலக யுத்தத்திற்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. சர்வதேச சங்கத்தின் தோல்விக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

iv. ஐக்கிய நாடுகள் சபை உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக எடுத்த முயற்சிகள் மூன்றினை விளக்குக. (6 புள்ளிகள்)

தரம்- 11 வரலாறு ( 2021)

விடைத்தாள் வரலாறு -01

பகுதி-01

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 2 | 11 | 4 | 21 | 3 | 31 | 3 |
| 02 | 3 | 12 | 4 | 22 | 3 | 32 | 1 |
| 03 | 4 | 13 | 3 | 23 | 4 | 33 | 3 |
| 04 | 3 | 14 | 2 | 24 | 2 | 34 | 3 |
| 05 | 2 | 15 | 3 | 25 | 3 | 35 | 4 |
| 06 | 3 | 16 | 1 | 26 | 4 | 36 | 4 |
| 07 | 1 | 17 | 1 | 27 | 1 | 37 | 1 |
| 08 | 2 | 18 | 2 | 28 | 2 | 38 | 3 |
| 09 | 1 | 19 | 1 | 29 | 3 | 39 | 2 |
| 10 | 4 | 20 | 2 | 30 | 2 | 40 | 3 |

வரலாறு -02

பகுதி 1

01) அ) வழங்கப்பட்டுள்ள இலங்கை, உலகப் படத்தினை பயன்படுத்தி உரிய இடங்களை குறித்திருப்பின் புள்ளிகள் வழங்கவும்.

ஆ) A. லோரேன்சோ B. அல்மேடா B. 3ம் விஜயபாகு C. ஜோசப் ஸ்டாலின் D. ரொபட் அன்ட்றூஸ்

ஈ) A. i. பாதிகாபயன் ii. ருவான்வெலிசாயா iii. உரோமாபுரி iv. கண்ணாடி, பளிங்கு

B. i. மொன்டெஸ்கியூ ii. பிரான்சியப் புரட்சி iii. சட்டம்,நிருவாகம்,நீதி ஆகிய துறைகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படல். iv. வோல்டேயர், ரூசோ

பகுதி 11

02) i) பாகியன்கல, பட்டதொம்பலென, கித்துள்கல

ii) மரணச்சடங்கு ( சடங்கு சம்பிரதாயம்) - இறந்த உடல்களை கற்குகைகளில் புதைத்தமை.
- மரணித்த சடலங்களை பாதுகாப்பான முறையில் நல்லடக்கம் செய்தமை.

( இரு ஆதாரங்கள் குறிப்பிட்டிருந்தாலும் புள்ளிகள் வழங்கவும். )

iii.) a) – பின்வரும் ஏதாவது மூன்றுதலைப்புகளில் விடையளித்திருத்தல்.

- வாழ்க்கையின் தன்மை - முக்கியத் தொழிலகள்
- குடியிருப்பு - மரணச்சடங்கு
- உணவு - தொழில்நுட்பம்

b) சுமண வாபிகாம, விஹார வாபிகாம, ஹுந்தரி வாபிகாம, கடஹ வாபிகாம

iv) தரம் 10- பக்கம் 27

03) i) a) குட்டக்கண்ண அபய மன்னன் b) 1ம் காசியப்ப மன்னன் c) நிஸ்ஸங்கமல்லமன்னன்

ii) A) பண்டுகாபயன் B) தேவநம்பியதிஸ்ஸ மன்னன் C) வசபமன்னன் D) துட்டகைமுனு

iii) தரம்-10 51ம் பக்கம்

iv) சோழரிடமிருந்து நாட்டை மீட்டமை.
தலைநகராக பொலன்னறுவையை தெரிவு செய்துக்கொண்டமை.
பொருத்தமான வெளிநாட்டுக் கொள்ளையை பின்பற்றியமை
விவசாய பொருளாதாரம் மற்றும் சமய நடவடிக்கைகள்

04) i) யோத கால்வாய், எலஹரகால்வாய், மினிப்பே கால்வாய், ஆகாய கங்கை, ரிதிபெந்தி கால்வாய்

ii) a) கலிங்கல்தொட்டி – குளத்து நீரின் அமுக்கத்திலிருந்து குளக்கட்டைப்

பாதுகாத்தல்.

b) அலைத்தாங்கி – குளக்கட்டின் அரிப்பை தடுத்தல்.

c) குளக்கட்டு - பாரிய நீர்பரப்பைத் தாங்கி நிற்றல்.

d) மடைக்கதவு - குளத்தின் அதிக நீரை கவனமாக வெளியேற்றல், குளத்து நீரின் வேகத்தால் கால்வாய் அரித்து செல்வதை தடுத்தல்.

iii) நில அளவீடு , காலத்தை அளத்தல், நிறையை அளத்தல் ( தரம் 10- 81-83 )

iv) ருவான்வெலிசாயவின் அத்திவாரம் , சீகிரியா நகர நிர்மாணம், பொய்கை அல்லது தடாகங்கள்

05) i) a) தம்பதெனியா b) குருணாகல் c) கோட்டை

ii) தம்பதெனியா, யாப்பகுவ, குருணாகல், கோட்டை

iii) மக்களின் சீவனோபாயமாக விவசாயம் காணப்பட்டமை.

வர்த்தக வளர்ச்சி – வர்த்தகப் பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டமை.

வெளிநாட்டு வர்த்தகம் வளர்ச்சியடைந்தமை.

iv) – 6ம் பராக்கிரமபாகு மன்னனின் பின்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்கள்.

1521 ஆம் ஆண்டு நிகழ்ந்த விஜயபாகு கொலை.

போர்த்துக்கேயரின் கைப்பொம்மையாக இருந்த தர்மபால மன்னனின் நடவடிக்கை.

( பொருத்தமான காரணிகளை குறிப்பிட்டு விளக்கியிருப்பின் புள்ளிகள் வழங்கவும்)

06) i) a) ஶ்ரீ விக்கிரம இராஜசிங்கன் b) 2ஆம் இராஜசிங்கன் c) 1ஆம் விமதர்ம சூரியன்

ii) a) 2ஆம் இராஜசிங்க மன்னன் b) 1ஆம் விமலதர்மசூரியன்

iii) - விவசாயம் முக்கிய தொழிலாகக் காணப்பட்டமை ( நெற்செய்கை, சேனைபச்செய்கை, வீட்டுத்தோட்டம்).

கைத்தொழில்கள் ( இரும்பு உருக்குத் தொழில், மரவேலை, பாய்பின்னல், வெடிமருந்து உற்பத்தி, நெசவு, மட்பாண்டம் …)

மிருகவளர்ப்பு

iv) - இயற்கை அரண்கள் காணப்பட்டமை
- கண்டி அரசர்களின் போர்த்தந்திரங்கள்
- மக்களின் ஆதரவு மன்னனுக்கு கிடைத்தமை
- கண்டி வீரர்களின் யுத்த முறை

07) i) பாண்டிச்சேரி, கரைக்கால், சந்திரநகர்

ii) **கி.பி.1815 இல் கண்டி மீதான படையெடுப்பு சாதகமானமைக்கான இரு காரணங்கள்**

ஜோன் டொயிலியின் நடவடிக்கை

மன்னனின் முரணான செயற்பாடு

**( வினாவில் பிழை ஏற்பட்டுள்ளதால் புள்ளிகள் வழங்கவும்)**

iii) அரசு காணி விற்பனைக் கொள்கைளை செயற்படுத்தல்.

கட்டாய அரச சேவை முறையை நீக்கியமை.

iv) விவசாய அபிவிருத்தி – ( நெல் உற்பத்தி )

வர்த்தக விவசாயம் - தேயிலை, இறப்பர். தென்னை மற்றும் சிறு ஏற்றுமதி பயிர்கள்

கைத்தொழிலில் ஏற்படுத்தப்பட்ட கொள்கைகள்

08) i) வேர்ஜினியா , மசாசுசெற்ஸ், நியுயோர்க், நியுஹம்ஷயர், மேரிலாந்து, கனக்டிக்கட், ரோட் தீவு, டெலவர், வட கரோலினா, நியூ ஜெர்சி, தென் கரோலினா, பென்சல்வேனியா, ஜோர்ஜியா

ii) a) “பிரதிநிதித்துவம் இன்றேல் வரியுமில்லை”

b) பிரித்தானியப் பிரதமந்திரி ஜோன் கிரன்வில்

c) “அனைத்து இனத்தவரும் சமமானவர்கள்”

d) ஜோர்ஜ் வொஷிங்டன்

iii. – அரசினதும் அரச குடும்பத்தினரினதும் ஆடம்பர வாழ்க்கையினால் ஏற்பட்ட அதிக செலவு.

- தேவையற்ற யுத்தச் செலவு

iv) – ஐக்கிய அமெரிக்கா நாடுகள் என்ற சுதந்திர அரசு உதயமானமை.

- அமெரிக்க ஐக்கிய நாட்டு மக்கள் தமது அரசியல் யாப்பினை உருவாக்கியமை.
- அடிப்படை மனித உரிமை பற்றிய உணர்வு உலகம் முழுதும் பரவியமை.

09) i) பிரத்தானியா, பிரான்ஸ், ரஷ்யா, இத்தாலி, சேர்பியா, ருமேனியா, கிரீஸ்

ii) - பிரான்சும் ஜேர்மனியும் பகைமை நாடுகளாக உருவெடுத்தமை.

- 2ஆம் வில்லியத்தின் செயற்பாடு
- குடியேற்றங்கள் குறித்தப் போட்டி
- ஆயதப்போட்டி, தேசியவாதம் வளர்ச்சியடைந்தமை
- பிஸ்மார்க்கின் வெளிநாட்டுக்கொள்கை
- ஆஸ்திரிய முடிக்குரிய இளவரசனின் கொலை

iii) - ஐக்கிய அமெரிக்க அரசுகள் சர்வதேச சங்கத்தில் இடம்பெறாமை.

- சர்வதேச சங்கம் எடுத்த தீர்மானங்களில் தோல்வியடைந்தமை.- (சமாதானப்படையின்மை)
- அங்கத்துவ நாடுகளுக்கிடையே ஒற்றுமையின்மை.
- உலக சமாதானம் மீறப்பட்ட சந்தர்ப்பங்களில் உரிய நடவடிக்கை எடுக்க முடியாமல் போனமை.

iv) – சுயஸ்கால்வாய் நெருக்கடி
வளைகுடா நெருக்கடி
கியூபாவின் ஏவுகணை நெருக்கடி

LOL.lk
Learn Ordinary Level

# විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

## පසුගිය විභාග ප්‍රශ්න පත්‍ර




• Past Papers • Model Papers • Resource Books
for G.C.E O/L and A/L Exams

සමනල දැනුම

විභාග ඉලක්ක ජයගන්න
Knowledge Bank

Master Guide

WWW.LOL.LK

CASH ON DELIVERY

HOME DELIVERY

Whatsapp contact
+94 71 777 4440

Website
www.lol.lk

Order via WhatsApp

071 777 4440